(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **33**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 செப்தெம்பர் 06, வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஆண்டறிக்கையையும் நிதிசார் கூற்றுக்களையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் :** (1) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மயந்த திசாநாயக்க சார்பாக கௌரவ பிமல் ரத்நாயக்க அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்;

(ii) 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(iii) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைகள்;

(iv) 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள்;

(v) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கைகள்;

(vi) 2013 ஆண்டுக்கான இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(vii) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை மாநாட்டு பணியகத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல் :**

மாத்தளை, ரத்தொடை வீதி, இல. 87/பி எனும் முகவரியில் வதியும் திரு. எம். ஏ. எல். பைஸால் அவர்களினது 2018.08.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனு பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. கூட்ட நடப்பெண்ணின்மை:** அவ்வேளை கூட்ட நடப்பெண்ணின்மை தலைமைதாங்கும் உறுப்பினரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றம் எண்ணப்பட்டது.

கூட்ட நடப்பெண் காணப்படாமையால், 11 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய, மு.ப. 10.11 மணிக்கு பிரதிச் சபாநாயகரால் வினாவின்றி 2018, செப்தெம்பர் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.